1975 நவம்பர் 6]

ஆராயப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர், அந்த மருத்துவ மனையின் நிலைமைகளை விளக்கி, அரசு அதை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னால், அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

(பிற்பகல் 4-40)

திரு. ஜி. சுவாமிநாதன் : இதுபற்றி இந்த அபிவிருத்தி மன்றக் கூட்டத்திலே பேசும்போது, தங்களாலே அதற்குப் பணம் கொடுத்து நடத்த இயலவில்லை என்றும், மாவட்ட ஆட்சித் தலைவர் அரசே இதை எடுத்துக் கொள்ளலாம் என்று கடிதம் எழுதியிருப்பதாகவும் சொன்னார்கள். ஆக, அதை அரசே நடத்துமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன். மேலும் திருவையாறு பகுதி மக்கள் அதிகமாக இருப்பதாலும், அதிக அளவில் நோயாளிகள் இருப்பதாலும், அரசு புதிதாக ஒரு மருத்துவமனையை வைக்க முயற்சி செய்யுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஏற்படுத்திய மருத்துவமனையில் மருந்து இல்லை என்ற நிலை இருக்கும்போது, புது மருத்துவமனை ஏற்படுத்துவது என்பது கட்டிய மனைவிக்கு குழந்தை இல்லை என்று புது மனைவி தேடுவது போல் ஆகிவிடும். அதற்கு அதிகமான செலவு ஆகும். ஆகவே, தற்போது இயலாது.

Malaria

* 76. *Q.*—THIRU D. V. D'MONTE : Will the Hon. the Minister for Health be pleased to staate—

(*a*) the specific measures taken by the Health authorities to combat the resurgence of Malaria and to control the mosquito menace in Tamil Nadu; and

(*b*) the steps taken to meet the reported shortage of Anti-Malaria Drugs?

மலேரியா

திரு. டி. வி. டி' மாண்டி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ் நாட்டில் மீண்டும் மலேரியா பரவுவதை எதிர்த்துப் போராடவும், கொசுத் தொல்லையைக் கட்டுப்படுத்தவும் சுகாதார அதிகாரிகளால் எடுக்கப்பட்ட திட்டவட்டமான நடவடிக்கைகள் யாவை ?

(இ) மலேரியா தடுப்பு மருந்துகள் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) விவர அறிக்கை யொன்று @ மன்றத்தின் முன்வைக்கப்பட்டுள்ளது.

THIRU D. V. D'MONTE: Sir, have the Government any proposal to use larve-eating fish called Gamboosa or Gabi as a weapon to control malaria, as is done by the Ahmedabad Municipal Corporation in Gujarat? May I know, Sir, what programme, if any, is in the mind of the Government and what it would cost?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஒரு விரிவான அறிக்கை தரப்பட்டிருக்கிறது. விவரங்களிலேகூட 'கண்டிஷனல்'-ஆகத்தான் ஒவ்வொரு கட்டத்திலேதான் பயன்படுத்த முடியும் என்று இருக்கிறது. எந்த ஒரு புது மருந்தையும் பயன்படுத்தக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும்.

திரு. டி. சந்தோஷம்: மதுரை மாநகராட்சியில் முன்பெல்லாம் டி.டி.டி. ஸ்ப்ரே ஒழுங்காக நடந்து வந்தது. இப்போது அது முற்றிலும் கைவிடப்பட்டுள்ளது. அவ்வாறு கைவிடப்பட்டது, எந்தவிதப் பயனும் ஏற்படவில்லை என்ற காரணத்தாலா அல்லது தேவையில்லை என்ற காரணத்தாலா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஒரு முறை மலேரியா ஒழிப்புப் பணி தீவிரமாக நடைபெற்றது. 1965 ஆம் ஆண்டிலே தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், மலேரியா ஒழிப்பு வெற்றிபெற்ற ஒன்ருகக் கருதப்பட்டது. அதற்குப் பின்னர் வேறு சில மாநிலங்களில், இந்த மலேரியா இடையிடையே தோன்றியது என்று தெரிவிக்கப்பட்டது. 1974 ஆம் ஆண்டிலே தமிழ் நாட்டில் தர்மபுரி மாவட்டத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்திலும், மேலும் ஈரோடு, சேலம், திருச்சி போன்ற பகுதிகளிலேயும், சென்னையிலேயும் மலேரியா மறுபடியும் காணப்பட்டது. மலேரியா அடையாளம் உள்ளவர்கள் சிகிச்சைக்கு வருகிருர்கள் என்ற நிலைமை ஏற்பட்டபோது, எந்தெந்தப் பகுதிகளிலே மறுபடியும் வளருகிறது என்று பார்த்து, அந்தந்தப் பகுதிகளிலே முனைப்புப் பணி நிறைவேற்றும்படி கேட்டுக்கொள்ளப்பட்டு, மாநகராட்சிகள் மூலமாகவும், நகராட்சிகள் மூலமாகவும் மற்றும் அரசு மருத்துவமனைகள் மூலமாகவும் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு செயல்படுத்தப் படுகின்றன. மதுரையிலே இப்போது இல்லை என்று சொன்னல், இப்போது மதுரையிலே அந்தப் பிரச்சினை இல்லை என்று பொருள்.

@ 93-94 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.